செ.வெ.எண்: 44/2021 நாள்: 19.08.2021

# திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் காலியாக உள்ள அரசு ஒதுக்கீட்டு இடங்களில் 2021-ம் ஆண்டு மாணவர் சேர்க்கைக்கு 2021 செப்டம்பர்-15-ம் தேதி வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன மாவட்ட ஆட்சித்லைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தகவல்!!!

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் காலியாக உள்ள அரசு ஒதுக்கீட்டு இடங்களில் 2021-ம் ஆண்டு மாணவர் சேர்க்கைக்கு 2021 செப்டம்பர்-15-ம் தேதி வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. குறைந்தபட்ச கல்வித் தகுதி 8 மற்றும் 10-ம் வகுப்பு தேர்ச்சி முதல் பட்டதாரிகள் வரை விண்ணப்பிக்கலாம். குறைந்த பட்ச வயது வரம்பு ஆண்களுக்கு 14 முதல் 40 வயதுவரை அனுமதி உண்டு பெண்களுக்கு உச்ச வயது வரம்பு இல்லை.

தகுதி வாய்ந்த மாணவ மாணவியர்கள் அனைவரும் இம் மாவட்ட தொழிற்பயிற்சி நிலையங்களில் பொறியியல் மற்றும் பொறியியல் அல்லாத தொழிற்பிரிவுகளில் சேர்ந்து பயிற்சி பெற்று அரசு,பொதுத்துறை, தனியார் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களில் அதிக அளவில் வேலைவாய்ப்புகள் பெறலாம். அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேரும் மாணவ மாணவியர்களுக்கு கட்டணமின்றி பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும்,கீழ்க்கண்ட அரசு நலத்திட்டஉதவிகளும் வழங்கப்படுகிறது.

1. விலையில்லாமடிக்கணினி
2. விலையில்லாமிதிவண்டி
3. விலையில்லாசீருடைமற்றும் காலணி
4. விலையில்லாபாடப்புத்தகங்கள்
5. மாதம்தோறும் ரூபாய் 750/- பயிற்சிக்கானஉதவித்தொகை
6. கட்டணமில்லா பஸ் பாஸ் வழங்கப்படும்

மேலும், தொழிற்பிரிவுகளில் பயிற்சி முடித்தவர்களுக்கு தொழில் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

நேரடி சேர்க்கைக்கான விண்ணப்பம் சமர்ப்பிக்க திருப்பூர் மாவட்டத்தில் உள்ள திருப்பூர், தாராபுரம் மற்றும் உடுமலைப்பேட்டை, அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள உதவி சேவை மையத்தை அனுகி விண்ணப்பக் கட்டணம் ரூ.50/- மட்டும் செலுத்தி விண்ணப்பிக்கலாம்.

மேலும், தகவல்களுக்கு திருப்பூர் மாவட்ட திறன் பயிற்சி அலுவலக மாவட்ட உதவி இயக்குநர் 0421-2230500, 9080276172, 9944739810, 9499055695/ முதல்வர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், திருப்பூர் 0421-2429201, 9499055696 / தாராபுரம் 9499055698 / உடுமலைப்பேட்டை9499055700 / மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலரை 9499055944 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம் எனவும் திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத்,இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**